| சாட்சி : PW 1 விஜயலெட்சுமி | அ.வ.எண். 266/2022 | 22.01.2025 |
|---|---|---|

<u>குறுக்கு விசாரணை</u>

ரெங்கநாதன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது சின்னம்மா மகன் ஆவார். எனது தாயாரும் ரெங்கநாதனின் தாயாரும் சகோதரிகள் ஆவர்கள். ரெங்கநாதனின் தகப்பனார் பெயர் என்னவென்றால் சன்னாசி ஆகும். தாவா சொத்து எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட வா.சா.ஆ.7 கணினி பட்டா தவிர வேறு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, பட்டா மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனார் தான் ரெங்கநாதனிடம் தாவா சொத்தை ஒத்தி சுவாதீனத்திற்கு கொடுத்தார் என்றால் சரிதான் ஆனால் கொடுத்த விபரம் எனக்கு தெரியாது, எனது தகப்பனார் இறந்த பிறகு தான் தெரியவந்தது. மேற்படி ஒத்தி சுவாதீனத்தை நானோ எனது தந்தையோ ஒத்தி தொகையை கொடுத்து நாளது தேதிவரை மீட்கவில்லை என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 04.02.2025 அன்று ஒத்திவைக்கப்படுகிறது)